

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் கழக பொருளாளரும். நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், இந்திய சுதந்திர போராட்ட வீரர் சிங்காரவேலர் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில் தேனாம்பேட்டை மண்டலம், லூப் சாலைக்கு "சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சாலை எனப் பெயர் சூட்டப்பட்டு, பெயர் பலகையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.42.94 கோடி செலவில் 14 விளையாட்டுத்துறை கட்டடங்கள் திறப்பு!

# ரூ.37.84 கோடி மதிப்பீட்டில் 3 புதிய திட்டப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, மார்ச் 6-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 14 விளையாட்டுத் துறை கட்டடங்களை திறந்து வைத்து, 37 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

**முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

செங்கல்பட்டில் 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், நீலகிரி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 3 கோடி ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள ஒலிம்பிக் அகாடமிகள், நாமக்கல் மாவட்டம் - சேந்தமங்கலம், சேலம் மாவட்டம் - ஆத்தூர் மற்றும் மேட்டூர், செங்கல்பட்டு மாவட்டம் - தாம்பரம் ஆகிய இடங்களில் தலா 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள்;

தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாரா விளையாட்டு அரங்கங்கள், சென்னை, முகப்பேரில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட விளையாட்டு வளாகம், கோயம்புத்தூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 4 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட பார்வையாளர் மாடம்;

சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய கபடி ஆடுகளம், நாமக்கல் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய கபடி ஆடுகளம் மற்றும் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இயற்கை புல்வெளி கால் பந்து மைதானம்;

என மொத்தம் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 14 விளையாட்டுத் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

கடலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 14 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை, சென்னை, வேளச்சேரி AGB வளாகத்தில் 16 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒலிம்பிக் தரத்தில் நீச்சல் மற்றும் டைவிங் குளம் புதுப்பிக்கும் மற்றும் மேம்படுத்தும் பணி, சென்னையில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாய்மரப் படகுப் பயிற்சி அகாடமி மற்றும் பாய்மரப் படகுப் போட்டிக்கான சிறப்பு மையம்;

என மொத்தம் 37 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் திறந்து வைத்தார்!

# நெல்லை மாவட்டத்தில் 831 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.605 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்!

நெல்லை., மார்ச். 6 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை,களக்காடு சேரன்மகாதேவி,நாங்குநேரி, வள்ளியூர்,இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.605 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து வடக்கன் குளத்தில் நடைபெற்ற விழாவில் சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார், தலைமையில் கூட்டு குடிநீர் திட்ட குழாய்களை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார்.

பின்னர் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை, சேரன்மகா தேவி, களக்காடு, நாங்குநேரி, வள்ளியூர், இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலு ள்ள 831 ஊரக குடியிருப்பு களுக்கு ரூ.605 கோடி மதிப்பில் தாமிரபரணி கூட்டு க்குடிநீர் திட்டத்தினை இன்று ( ( 0403 2026) திறந்து வைத்துள்ளார் கள். இத்திட்டத்தில் நாளொன்றுக்கு தேவையான 22.79 மில்லியன் லிட்டர் குடிநீரை தாமிரபரணி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேல முன்னீ ர்பள்ளம் அருகில் நீர் எடுக்கும் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு, அதிலிருந்து 160 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் குடிநீர் எடுக்கப்பட்டு, சிங்கிகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள 22.79 மில்லியன் லிட்டர் குடிநீர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திக ரிக்கப்பட்டு பின்னர் 160 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் மூலம் சுத்தி கரிக் கப்பட்ட குடிநீர், பிரண்டைமலை, தெற்கு வள்ளியூர் மற்றும் ராதாபுரம் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மூன்று பிரதான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு 60.94 கிலோ மீட்டர் நீளமுள்ள நீருந்து மற்றும் தன்னோட்ட குழாய்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டு பின் இவற்றில் இருந்து 54 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது.பின்னர் தரைமட்ட நீர் தேக்க தொட்டிகளில் இருந்து, நீர் இறைப்பான்கள் மூலம், 569.5 கிலோமீட்டர் நீளமுள்ள நீருந்து குழாய்கள் மூலமாக,புதிதாக கட்டப்பட்டுள்ள 162 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 1.176 மேல்நிலை நீர் தேக்க தொட்டி களுக்கும் குடிநீர் ஏற்றப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வீடுகள் தோறும் குடிநீர் என்ற அடிப்படையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் 65,434 வீடுகளுக்கு செயல்படுத்தப்பட்டு ள்ளது குடிநீர் இணைப்புகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து ரூ.423.13 கோடி மதிப்பில் களக்காடு நகராட்சி, வடக்கு வள்ளியூர், பணகுடி, திசைய ன்விளை, ஏர்வாடி, திருக்குறுங்குடி, நாங்குநேரி, மூலைக்கரைப்பட்டி, ஆகிய 7 பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் வரும் இரண்டு மாதங்களில் அனைத்து பணிகளும் முடிவடைந்து பொதுமக்களுக்கு தாமிரபரணி தண்ணீர் கிடைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் சா.ஞானதிரவியம் தலைமை பொறியாளர் கணேசன,மேற்பார்வை பொறியாளர் கருப்பையா,நிர்வாகப் பொறியாளர் ராமலெட்சுமி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ராஜா ஞானதிரவியம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர் அவர்கள்,சாந்தி சுயம்பு, இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு மற்றும் அலுவலர்கள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கோ.தளபதி – அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தலைமை! மதுரை மாநகர்–முன்னாள் பகுதிக் கழகச் செயலாளர்

# எல்லீஸ் இரா.முருகன் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு –பி.மூர்த்தி– அனிதா ராதாகிருஷ்ணன் வாழ்த்து!

*மதுரை, மார்ச் 6 -*

*மதுரை விராட்டிபத்து முன்னாள் பகுதி கழக செயலாளர் நினைவில் வாழும் எல்லீஸ் இரா.முருகன் - பாமா முருகன் ஆகியோரின் புதல்வர் எம் ராஜராஜன் - மதுரை பொன்னகரம் கே.நேரு - முத்து ஈஸ்வரி ஆகியோரின் புதல்வி என்.பிருந்தா திருமண வரவேற்பு விழா இன்று (06.03.2026 -வெள்ளிக்கிழமை) காலை 11 மணி அளவில் மதுரை எல்லீஸ் நகரில் உள்ள எம் .ஆர் .சி. மஹாலில் நடைபெறுகிறது.*

*மணவிழாவிற்கு மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.*

*அமைச்சர்கள் தங்கம் தென்னரசு பி மூர்த்தி அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் சி. பென்னான் டஸ் ரத்தின ராஜா, எம். பொன் முத்துராமலிங்கம் , வி.வேலுச்சாமி, குழந்தைவேலு, எம்.மணிமாறன், இரா.ராஜீவ் காந்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*பி.கே.செந்தில், டி. அன்பு என்கிற துரை கோபால்சாமி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.*

*இம்மண விழாவில் சு.வெங்கடேசன் எம்.பி., தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., கோ ஐயப்பன் எம்.எல்.ஏ., வெங்கடேசன் எம்.எல்.ஏ., புதூர் பூமிநாதன் எம்.எல்.ஏ., ஆர். எம்.அன்பு நீதி, இன்பா ஏ.என்.ரகு, ஜி.பிரதீப் என்கிற ஜி.பி.ராஜா , டான் அசோக் , அதலை பி.செந்தில்குமார், ஈரோடு வீரமணி, கே.சி.திருமாறன் , கணேசன், டி. நாகராஜன், ப.ரவிக்குமார், எம் .அழகர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

### விழுப்புரம், செஞ்சி – ஆலம்பூண்டி கிராமத்தில் காருடன் கிணற்றில் மூழ்கி

# உயிரிழந்த நான்கு பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 6 -**

**விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஆலம்பூண்டி கிராமத்தில் காருடன் கிணற்றில் மூழ்கி உயிரிழந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு: -

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஆலம்பூண்டி கிராமத்தில் 03.03.2026 அன்று காலை சுமார் 08.30 மணியளவில் புதுவை - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் TN10 BE 8935 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்று எதிர்பாராதவிதமாக கட்டுப்பாட்டை இழந்து நெடுஞ்சாலை அருகிலுள்ள தனியாருக்குச் சொந்தமான கிணற்றில் விழுந்து மூழ்கியதில் காரில் பயணம் செய்த சென்னை, கெருகம்பாக்கத்தைச் சேர்ந்த திரு.ராஜா (வயது 44) த/பெ.மணி மற்றும் திரு.வினோத் (வயது 39) த/பெ. சேகர்; கொளப்பாக்கம் காந்தி தெருவைச் சேர்ந்த திரு. ஜெயமுருகன் (வயது 43) த/பெ.ஆதிகேசவன் மற்றும் மௌலிவாக்கம், பொன்னியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த திரு.சேகர் (வயது 27) த/பெ. குமார் ஆகிய நான்கு நபர்கள் கிணற்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கழகத் தலைவர் - முதல்வர் தலைமையில் 'திராவிட மாடல்' 2.0 ஆட்சி அமைந்திட

# களத்திலும் சமூக வலைதளத்திலும் அயராது பணியாற்றுவோம்!

## கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் காணொலிக் கூட்டத்தில் அணிச் செயலாளர் – அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி. ராஜா உரை!

*சென்னை, மார்ச் 6-*

*திராவிட மாடல் 2.0 ஆட்சி நம் கழகத் தலைவர் திராவிட நாயகன் அவர்கள் தலைமையில் அமைவதை உறுதி செய்திட மார்ச் 9ஆம் தேதி, கழக வரலாற்றில் திருப்பு முனை வெற்றிகள் பல தந்த மலைக் கோட்டை மாநகரமாம் திருச்சியில் நடைபெறும் 'ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்' தேர்தல் சிறப்பு நிர்வாகிகள் மாநாட்டில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஒரு இலட்சம் நிர்வாகிகளும் தவறாமல் பங்கேற்று, களத்திலும் தளத்திலும் நம் பணியை முழுமையாக நிறைவேற்றிட வேண்டும் என மார்ச் 3 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை ஏற்ற அணிச் செயலாளர் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆலோசனைகள் வழங்கினார்.*

*வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரையில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் செயல்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.*

*இணைச் செயலாளர் டாக்டர் சி.மகேந்திரன், அணியின் ஆலோசகர்கள், மாநில துணைச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.*



நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பரப்புரை நெல்லை பேட்டை கிழக்கு பகுதி 27 ஆவது வார்டு 238, 240 ஆகிய பாகங்களில் தேர்தல் பரப்புரை நிகழ்வு நெல்லை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை விளக்கி துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்து துவக்கி வைத்தார். நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் உலகநாதன் 27வது வட்டச் செயலாளர் கேபிள் குமரேசன், மூத்த முன்னோடி நாதன்,சோமசுந்தரம், மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர்கள் பெப்சி சரவணன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வீடு,வீடாக சென்று விநியோகம் செய்தனர்.




திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் விருப்பாட்சி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார் . இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சி தலைவர் எஸ்.சரவணன், ஒன்றிய செயலாளர் தர்மராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், செந்தில்நாதன், பழனிச்சாமி,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி உள்ளிட்ட பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.